## நிறைவுபெற்றுவரும் ஆய்வுத் திட்டங்கள்

முனைவர் அனந்த குமார் கிரி

• *சுய வளர்ச்சியும் சமூக மாற்றமும்: ஸ்வத்யாய பரிவாரத்தின் கொள்கையும் நடைமுறையும் பற்றிய ஓர் ஆய்வு.*
நல்கை: ஐ.சி.எஸ்.எஸ்.ஆர்., புது தில்லி.

பேராசிரியர் எஸ். ஜனகராஜன்

• *மோதலிலிருந்து கூட்டிணைவு வரை: காவிரி நெருக்கடிக்கான தீர்வை நோக்கிய பயனுரிமையாளர்கள் கலந்துரையாடல்.*
நல்கை: இண்டர்நேஷனல் வாட்டர் மானேஜ்மெண்ட் இன்ஸ்டிடியூட்.

• *திறமான தொடர்பாடல் வழிச் செயல்பாடு: உள்ளூர் நீர் நிர்வாகத் திட்டத்தின் முடிவுகளைப் பரவலாக்கல்.*
நல்கை: இன்ஸ்டிடியூட் ஃபார் சோசியல் அண்டு என்வைர்மெண்டல் டிரான்சிஷன், அமெரிக்கா.

• *பாலாற்றுப்படுகையில் நிலத்தடி நீர் வரட்சி, நீர் மாசு, வேளாண்மை தேக்கம்.*
நல்கை: ஐ.டி.ஆர்.சி., கானடா

முனைவர் கிருபா அனந்தபூர்

• *இந்தியாவில் முறை மற்றும் முறைசாரா உள்ளூர் ஆட்சி.*
நல்கை: வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், சசக்ஸ் பல்கலைக்கழகம்.

• *கர்நாடகத்தில் ஊரகக் குடி மக்களுக்குப் பொது வானொலி வழி பஞ்சாயத்து அரசு பற்றிய தகவல் பரிமாற்றத்திற்கு ஆதரவு.*
நல்கை: ஃபோர்டு பவுண்டேசன், புது தில்லி.

பேராசிரியர் கே. நாகராஜ்

• *ஏழைகளுக்கான உரிமையும் பிரதிநிதித்துவமும்.*
நல்கை: வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், சசக்ஸ் பல்கலைக்கழகம்.

பேராசிரியர் வி. கே. நட்ராஜ்

• *மறு பகிர்வுக்காக வளங்களைத் தேடுதல்: இந்திய மாநிலங்களில் அரசு நிதிப் பகிர்மானம்.*
நல்கை: வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், சசக்ஸ்.

பேராசிரியர் நிர்மல் சென்குப்தா

• *பாரம்பரிய அறிவுப் பாதுகாப்பும், நீடித்த பயன்பாடும் பற்றிய ஆய்வுக்கான ஒரு சட்டகம்.*
நல்கை: சௌத் ஏசியன் நெட்வொர்க் ஃபார் டெவலெப்மெண்டல் எகனாமிக்ஸ், காட்மாண்டு, நேபாளம்.

பேராசிரியர் நிர்மல் சென்குப்தா — முனைவர் மோஅனா பகபதி

• *வணிக இலகுவாக்கத்திற்கான நடைமுறைகள்.*
நல்கை: தொழில் மற்றும் வணிக அமைச்சகம், இந்திய அரசு.

பேராசிரியர் பத்மினி சுவாமிநாதன்

• *கல்வியும் ஊட்டச்சத்தும்: தமிழகத்தின் மதியச் சத்துணவுத் திட்டம் பற்றிய பாலின நோக்கிலான நிதிநிலை ஆய்வு.*
நல்கை: யுனைடெட் நேஷனல் டெவலப்மெண்ட் ஃபண்ட் ஃபார் விமன், புது தில்லி.

• *உலகமயமாக்கச் சூழலில் பாலினம், சந்தை மற்றும் வாழ்க்கை: தென்னிந்தியாவில் முந்திரித் தொழில்.*

முனைவர் எம். தங்கராஜ்

• *TAHDCO: ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான திட்டங்கள்: அவற்றின் செயல்பாடும் தாக்கமும் பற்றி ஒரு மதிப்பீடு.*
நல்கை: TAHDCO, சென்னை.


சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்திற்காக அதன் இயக்குனரால் வெளியிடப்பெறுவது.
79, இரண்டாம் பிரதான சாலை, காந்தி நகர், அடையாறு, சென்னை 600 020.
தொலைபேசி : 91-(44) - 441 - 1574/ 2589/ 2295/ 9771
தொலை நகல் : 91-(44) - 491 0872 இணையம் : http://www.mids.ac.in
அச்சகம் : ரிலையன்ஸ் பிரிண்டர்ஸ், அடையாறு, சென்னை 600 020.



சென்னை
வளர்ச்சி
ஆராய்ச்சி
நிறுவனம்

எம் ஐ டி எஸ்

# வளர்முகம்

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனச் செய்தி மடல்

நவம்பர் 2003 | தனிச்சுற்றுக்கு மட்டும் | இதழ் 2


வளர்ச்சி ஆய்வில் சிறந்த பங்களிப்புக்கான மால்கம் ஆதிசேஷையா விருது வழங்கப்படும் நாளில் வளர்முகம் வெளிவருகின்றது. இவ்வாண்டுக்கான விருது, கல்வித் திட்டம் மற்றும் நிர்வாகத்திற்கான தேசிய நிறுவனத்தில் பேராசிரியராக விளங்கும் முனைவர் ஜந்தியாலா திலக் அவர்களின் கல்வியில் நிலவும் சமத்துவமின்மைகள் பற்றிய ஆராய்ச்சிக்காக வழங்கப்படுவதாக நடுவர் குழு அறிவித்துள்ளது.

இது வளர்முகத்தின் இரண்டாம் இதழ். இனி ஆண்டுக்கு இரு முறை வளர்முகம் வெளியாகும். சென்ற ஆண்டில் பல முக்கிய நிகழ்வுகள் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் நடந்தேறியுள்ளன.

ஜூலை 2003 இறுதியில் பேராசிரியர் சி. டி. குரியன் தலைவர் பொறுப்பிலிருந்து விலகினார். ஆயினும், மதிப்புறு பேராசிரியராகவும் அறங்காவலராகவும் அவருடைய பணி தொடரும். எம்.ஐ.டி.எஸ்.ஸின் வளர்ச்சிக்குப் பேராசிரியர் சி.டி. குரியன் ஆற்றிய பங்கை வளர்முகம் நெகிழ்வுடன் பதிவுசெய்கிறது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் மு. ஆனந்தகிருஷ்ணன், புதிய தலைவராக ஆகஸ்டு 2003இல் பொறுப்பேற்றார். வளர்முகம் அவரை அன்புடன் வரவேற்கிறது.

புகழ்பெற்ற வரலாற்றாசிரியரும் கல்வெட்டியல் வல்லுநருமாகிய முனைவர் எ. சுப்பராயலு 2003ஆம் ஆண்டுக்கான மால்கம் ஆதிசேஷையா வருகைப் பேராசிரியராக விளங்குகிறார்.

புதிய துணைப் பேராசிரியர்கள் மூவர் மற்றும் மால்கம் ஆதிசேஷையா கொள்கை ஆய்வு இருக்கைப் பேராசிரியர் அமர்த்தப்பட்டு, எம்.ஐ.டி.எஸ்.ஸின் ஆய்வு வளம் பெருகியுள்ளது.

ஆய்வு மாணவர் நால்வரின் சேர்க்கையோடு பிஎச்.டி. ஆய்வுத் திட்டமும் புத்தூக்கம் பெற்றுள்ளது.

நிறுவன ஆய்வுப் புலத்தினர் சிலரின் முன்முயற்சியில் ‘அமிட்ஸ்ட்’ என்னும் கருத்துக்களம் உருப்பெற்று மாதந்தோறும் ‘உரத்த சிந்தனை’ நடைபெறுகிறது.

நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்பக் கட்டுமானம் நவீனப்படுத்தப்பட்டு, இப்பொழுது 24 மணி நேர இணைய சேவை வழங்கப்படுகின்றது. நூலகமும் பெருமளவு கணினிமயப்படுத்தப்பட்டுள்ளது.

### உள்ளே. . .


ஆசிரியரிடமிருந்து 1
நிறுவன ஆய்வாளர்களின் ஆராய்ச்சிப் பங்களிப்பு 2
மால்கம் ஆதிசேஷையா விருது 3
மால்கம் ஆதிசேஷையா வருகைப் பேராசிரியர் 5
கருத்தரங்குகளும் மாநாடுகளும் 6
ஆய்வுத் திட்டங்கள் 7

ஆகஸ்டு 2003இல் பேராசிரியர் மு. ஆனந்தகிருஷ்ணன் எம்.ஐ.டி.எஸ். தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார். ஆறாண்டுகள் தலைவராக விளங்கிய பேராசிரியர் சி.டி. குரியன் அவர்களைத் தொடர்ந்து இந்தப் பொறுப்பை இவர் ஏற்கிறார். அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும், தமிழ்நாடு உயர் கல்வி மன்றத்தின் *(TANSCHE)* துணைத் தலைவராகவும் இவர் விளங்கியிருக்கிறார். சென்னை மற்றும் மின்னசோட்டா பல்கலைக்கழகங்களில் பயின்ற பேராசிரியர் ஆனந்தகிருஷ்ணன் புகழ்பெற்ற சிவில் பொறியாளர் ஆவார். ஐ.நா.வில் பல முக்கிய உயர் பதவிகளை வகித்துள்ளார். வாஷிங்டன் இந்தியத் தூதரகத்தில் அறிவியல் ஆலோசகராகவும் சில ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார். பத்மஸ்ரீ விருது பெற்றதோடு, கணினியிலும் இணையத்திலும் தமிழின் பயன்பாட்டை இயல்வதாக்கியதற்காக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பரிசையும் பெற்றுள்ளார். தமிழக முதல்வர் தலைமையிலான தகவல் தொழில்நுட்பச் செயல் குழுவுக்கும் இவர் துணைத் தலைவராக விளங்கியிருக்கிறார்.

## நிறுவன ஆய்வாளர்களின் ஆராய்ச்சிப் பங்களிப்பு

*முனைவர் சி. இலக்ஷ்மணன்.* அரசியல் கோட்பாடு, அரசியல் பொருளாதாரம், திராவிட அரசியல், ஒடுக்கப்பட்ட சமூக இயக்கங்கள், திரைப்பட ஆய்வுகள் ஆகிய துறைகளில் இவர் கவனம் செலுத்திவருகிறார். பொதுசன ஊடகங்கள், ஆய்விதழ்கள், ஆய்வு நூல்கள் ஆகியவற்றில் இவர் கட்டுரைகள் எழுதியுள்ளார். தற்பொழுது தமிழ்த் திரைப்படத் தொழிலின் அரசியல் பொருளாதாரத்தை ஆராய்ந்து வருகிறார்.

*முனைவர் எம். விஜயபாஸ்கர்.* புதிய தொழில்நுட்பங்களின் சமூக—அரசியல் அசைவியக்கங்கள், தொழில்மயமாக்க அசைவியக்கம், உழைப்புச் சந்தை என இவருடைய ஆய்வு ஈடுபாடுகள் விரிந்துள்ளன. இந்திய உழைப்புச் சந்தையில் தகவல் மற்றும் தொடர்பியல் தொழில்நுட்பங்களின் தாக்கம் பற்றி ஓர் ஆய்வறிக்கையை அண்மையில் கையளித்துள்ளார். தகவல் மற்றும் தொடர்பியல் தொழில்நுட்பங்களும் இந்திய வளர்ச்சியும் என்ற பொருளில் அமைந்த ஓர் ஆய்வு நூலை இணைத் தொகுப்பாசிரியராகத் தயாரித்துவருகிறார்.

*முனைவர் ஜி.எஸ். கணேஷ் பிரசாத்.* அதிகாரப் பரவல், ஊரக வளர்ச்சி, இயற்கை வள மேலாண்மை — குறிப்பாக நீர்வள மேலாண்மை ஆகியவற்றில் இவர் சிறப்புக் கவனம் செலுத்துகிறார். பல தேசிய மற்றும் அனைத்துலக அமைப்புகளுடன் இணைந்து ஆழமான கள ஆய்வை மேற்கொண்டு வருகிறார். நீர்வளப் பாதுகாப்பு பற்றி ஒரு நூலையும் பதிப்பித்துள்ளார். ஒப்பீட்டு நோக்கில் அரசுச் செலவினப் பகிர்மானம் பற்றிய ஆய்வுத் திட்டத்திலும் பங்காற்றி வருகிறார்.

வறுமை மற்றும் சமத்துவமின்மையை ஆராய்வதின் ஒரு பகுதியாகப் பேரா. *எஸ். சுப்பிரமணியன்,* எழுத்தறிவின் அளவீடு பற்றிக் கவனம் செலுத்துகிறார். மூப்பு, பெண்கள் நலத்திற்கும் பிறப்புப் பால் விகிதாசாரத்திற்குமான தொடர்பு ஆகியவை பற்றியும் ஆராய்ந்து வருகிறார். பின்லாந்து நாட்டு 'வைடர்' அமைப்பில் வருகைப் பேராசிரியராக மே 2003இல் இவர் பணியாற்றினார்.

இவ்வாண்டில் இரண்டு நூல்களை



### சிறப்புரை ஆற்றிய அறிஞர்கள்

- முனைவர் ஜி.கே. ஜெயராம், இன்ஃபோசிஸ்.
- முனைவர் டெட்லெவ் கிளாசன், ஜெர்மனி.
- முனைவர் இராஜீவ் பார்கவா, தில்லி பல்கலைக்கழகம்.
- பேரா. ஜான் டிரெஜ், தில்லி பல்கலைக்கழகம்.
- பேரா. பார்த்தசாரதி ஷோம், எம்.ஐ.டி.எஸ்.
- பேரா. தாமஸ் டிரவுட்மன், மிச்சிகன் பல்கலைக்கழகம்.
- முனைவர் லாரன்ஸ் கோஹன், காலிபோர்னியா பல்கலை.
- முனைவர்கள் நிக்கலஸ் வான் ஹெர்/கேதரீன் பிரன், நோர்வே.
- முனைவர்கள் ராகவேந்திரா/சீதாப்ரா சின்ஹா, சென்னை.
- முனைவர் ஏ.கே.ஜெ.வைட், இங்கிலாந்து.
- பேரா. கௌரி விஸ்வநாதன், கொலம்பியா பல்கலைக்கழகம்.
- பேரா. ஆர். இராதாகிருஷ்ணன், மாசாசூட்ஸ் பல்கலை.
- முனைவர் நளினி ராஜன், சென்னை.
- முனைவர் கோபால் குரு, தில்லி பல்கலைக்கழகம்.
- முனைவர் குனல் சீடர்லாஃப், உப்சலா பல்கலைக்கழகம்.

### புதிய பிஎச்.டி ஆய்வு மாணவர்கள்

திரு. ஆர். மணிவாசகன்: *தமிழகத்தில் வறுமையும் சத்துணவும்.*

திரு. சி. ஜெரோம் சாம்ராஜ்: *வரலாற்று நோக்கில் தலித்துகளும் நில உரிமையும்.*

டாக்டர் எஸ். ரேவதி: *தமிழகப் பழங்குடியினரிடையே இனமருத்துவம்.*

திரு. எம். அறிவழகன்: *விடுதலைக்கு முந்தைய தமிழகத்தில் காடுகள், சுற்றுச்சூழல் மாற்றங்கள் மற்றும் பழங்குடியினர்.*

### நிறைவுபெற்ற ஆய்வுத் திட்டங்கள்

முனைவர் எஸ். ஜனகராஜன்
• *நிலத்தடி நீருக்கான மோதல்களும் உள்ளூர் நீர் வரத்து வாய்ப்புகளும்.*
நல்கை: ஐ.டி.ஆர்.சி., கானடா.

பேராசிரியர் கே. நாகராஜ்
• *தட்சிண கன்னட மாவட்டத்தில் கருச்சிதைவு: சமூகப் பண்பாட்டு மற்றும் மருத்துவ அடிப்படைகளும் அவற்றின் விளைவுகளும்.*
நல்கை: ஹெல்த் வாட்ச் டிரஸ்ட், புது தில்லி.
• *உழைப்புச் சந்தையில் ஒப்பந்த உடன்படிக்கைகள்: தோட்டத் தொழில்கள் தொடர்பாக.*
நல்கை: வி.வி.கிரி தேசியத் தொழிலாளர் நிறுவனம், தொழிலாளர் அமைச்சகம், இந்திய அரசு.

பேராசிரியர் பத்மினி சுவாமிநாதன்
• *பாலின நிதிநிலையறிக்கை ஆய்வு.*
நல்கை: நேஷனல் இன்ஸ்டிடியூட் ஃபார் பப்ளிக் ஃபைனான்ஸ் அண்டு பாலிசி... 

பேராசிரியர் பி. இராதாகிருஷ்ணன்
•*பெண்களும் தேர்தல் அரசியலும்: 13ஆம் மக்களவைத் தேர்தலில் சென்னையில் வாக்காளர் செயல்பாடு.*
நல்கை: மால்கம் மற்றும் எலிசபெத் ஆதிசேஷையா அறக்கட்டளை.
• *தமிழ்நாட்டில் அறிவியல், தொழில்நுட்பம், சமூக அறிவியல் மற்றும் உயர்கல்வி: கல்வி வாய்ப்புகளின் ஜனநாயகமயமாக்கம் பற்றிய ஓர் ஆய்வு.*
நல்கை: மனிதவள வளர்ச்சி அமைச்சகம், இந்திய அரசு.

முனைவர் எம். தங்கராஜ்
• *தமிழகத்தில் நிலச் சீர்திருத்தம்.*
நல்கை: லால் பகதூர் சாஸ்திரி நேஷனல் அக்காதெமி, மசூரி.
• *தமிழகத்தில் தலித் கிறித்தவர் மேம்பாட்டுக்கான பத்து அம்சத் திட்டம்: ஒரு மதிப்பீடு.*
நல்கை: மிசரியார், ஜெர்மனி.

## கருத்தரங்குகளும் மாநாடுகளும்

**காவிரி நீர்ப் பயனுரிமையாளர் கலந்துரையாடல்**

தமிழக, கர்நாடக மாநில விவசாயிகளை அழைத்து, பயனுரிமையாளர் கலந்துரையாடலைத் தொடங்க எம்.ஐ.டி.எஸ். முன்முயற்சி எடுத்துள்ளது. காவிரிப் பிரச்சனைக்குத் தீர்வு காணும் முயற்சிகளுக்கு இது வலுச்சேர்க்கும். 'மோதலிலிருந்து கூட்டிணைவு வரை:' என்ற தலைப்பில் இரண்டு கூட்டங்கள் நடந்துள்ளன. ஏப்ரல் 2003இல் சென்னையில் முதல் கூட்டம் நடந்தது. இரு மாநிலங்களின் விவசாயிகளை அழைத்து, பரஸ்பர அச்சங்களையும் கருத்து வேறுபாடுகளையும் களைவதும், இருசாராருக்கும் இடையேயான உண்மையான புரிந்துணர்வின் அடிப்படையில் தீர்வை நோக்கி நகர்வதுமே இக் கலந்துரையாடலின் குறிக்கோள். நூறு விவசாயிகள் பங்கெடுத்துக்கொண்ட இக்கலந்துரையாடலில் கல்வியாளர்கள், ஓய்வுபெற்ற அதிகாரிகள், இதழாளர்கள், அரசு சாரா நிறுவனங்கள், வழக்குரைஞர்கள் ஆகியோரும் இரு மாநிலங்களிலிருந்தும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்திற்குக் கிடைத்த ஒருமித்த வரவேற்பு பெங்களூரில் ஜூன் 2003இல் நடந்த இரண்டாம் கலந்துரையாடலுக்கு வழி செய்தது. இரு தரப்பு விவசாயிகளும் கேட்டுக் கொண்டபடி இரண்டு மாநிலத்தையும் சேர்ந்த பன்னிரண்டு, பன்னிரண்டு பேர் அமைந்த ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இதுவரை இரு முறை சந்தித்து, பற்றாக்குறை ஆண்டுகளில் நீரை எவ்வாறு பங்கிடுவது என்ற மையப் பிரச்சினையைப் பற்றிய கலந்தாய்வைத் தொடங்கியுள்ளது. இந்த முயற்சியை ஒருங்கிணைத்து வருபவர் பேரா. எஸ். ஜனகராஜன்.

**வணிக இலகுவாக்கம்: பயிலரங்கு**

13 பிப்ரவரி 2003இல் வணிக இலகுவாக்கம் பற்றிய பயிலரங்கில் இந்திய ஏற்றுமதியாளரின் பிரச்சனைகளும் பிற நாடுகளின் வணிக இறக்குமதித் தேவைகளும் முக்கியப் பொருளாக விளங்கின. மத்திய அரசின் வணிக—வருவாய் அமைச்சகத்தின் அதிகாரிகள் இதில் கலந்துகொண்டனர். பேரா. நிர்மல் சென்குப்தா தலைமையேற்றார். முனைவர் மோஅனா பகபதி பயிலரங்கப் பொருள் பற்றி உரையாற்றினார்.

**அரசு நிதிப் பகிர்மானம்: பயிலரங்கு**

7 ஏப்ரல் 2003இல் அரசு நிதிப் பகிர்மானத்துக்கான வழிமுறைகள் பற்றிய பயிலரங்கு நடைபெற்றது. தமிழ்நாடு, கர்நாடகம், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் அரசு நிதிப் பகிர்மானத்தின் வளர்ச்சி பற்றிய கட்டுரைகள் கையளிக்கப்பெற்றன. திரு. கே. வி. பழனிதுரை, திரு. டி. ஆர். சதீஷ் சந்திரன், திரு. டி. பந்தோபாத்யாய ஆகியோர் மூன்று அமர்வுகளுக்குத் தலைமையேற்றனர். ஒப்பியல் நோக்கில் அமைந்த கடைசி அமர்வுக்கு, சசக்ஸ் பல்கலைக்கழகப் பேரா. மிக் மூர் தலைமையேற்றார். மூன்று மாநிலங்களையும் சேர்ந்த முதுநிலை அதிகாரிகள் மற்றும் துறை வல்லுநர்கள் கலந்துகொண்டனர்.

**விளிம்புகளைக் கடந்த உரையாடல்**

மிச்சிகன் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து 'விளிம்புகளைக் கடந்த உரையாடல்: சிறுபான்மையினரிடையே பண்பாடு, பாலினம், அதிகாரமளிப்பு' என்ற பொருளில் 18—31 ஜூலை 2003இல் எம்.ஐ.டி.எஸ். ஒரு பயிலரங்கை ஒழுங்கு செய்தது. மிச்சிகன் பல்கலைக்கழக ஆப்பிரிக்க—அமெரிக்க மாணவர்கள் கலந்துகொண்டனர். பல்வேறு சமூக—பண்பாட்டுச் சூழல்களில் இனம், சாதி, பாலினம் இணையும் புள்ளிகள், முக்கியமான தலித் இயக்க ஆர்வலர்கள் மற்றும் அறிவாளர்களுடனான ஊடாட்டத்தின் வழி ஆராயப் பெற்றன. இப்பயிலரங்கை மிச்சிகன் பல்கலைக்கழகத் துணைப் பேரா. முனைவர் ராம் மகாலிங்கத்துடன் இணைந்து ஏற்பாடு செய்தவர் முனைவர் எஸ். ஆனந்தி.



யும், ஒரு தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ள முனைவர் அனந்த குமார் கிரி சமூக ஆய்வியல் கோட்பாடும் முறைகளும் பற்றிய ஒரு நூலைத் தயாரித்து வருகிறார். பெர்லின் சர்வதேச ஆசிய ஆய்வு நிறுவனம், இஸ்ரேலின் பென்—குரியன்பிராம் மற்றும் அமெரிக்காவின் கென்டக்கி பல்கலைக்கழகத்தில் சபாட்டிக்கல் விடுப்பில் பணியாற்றினார்.

பால் விகிதாசார வேறுபாடுகள் பற்றி ஆராய்ந்துள்ளதோடு, மக்கள் தொகையின் வயது அமைப்பு மற்றும் மூப்பு பற்றி முனைவர் டி. ஜெயராஜ் ஆராய்ந்துள்ளார். கிராமப்புறங்களின் சிறார் தொழில் மற்றும் பெண்கள் நலத்திற்கும் பால் விகிதாசாரத்திற்குமான தொடர்பு பற்றிய ஆய்வுகள் விரைவில் வெளிவரவுள்ளன.

தலித்துகளின் நிலைக்கும் நிலவுரிமைக்குமான தொடர்பை முனைவர் எம். தங்கராஜ் ஆராய்ந்து வருகிறார். தலித் கிறித்தவர்களுக்கான பத்து அம்சத் திட்டத்தை மதிப்பிட்டு ஓர் அறிக்கையினையும் தயாரித்து வருகிறார்.

நீலகிரியில் தோட்டத் தொழிலாளர் பற்றி ஆராய்ந்துவரும் பேரா. கே. நாகராஜ், தட்சிண கன்னடப் பகுதியில் வறிய மக்களிடையே கருச்சிதைவு பற்றிய ஓர் ஆய்வினை செய்துமுடித்துள்ளார். இந்தியா வெங்கும் ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தின் மூலமாக எந்த அளவுக்கு அரசுக் கொள்கையை உருவாக்குவதில் ஏழைகளின் குரலுக்கு இடம் உள்ளது என்பது பற்றியும் ஆய்வு மேற்கொண்டுள்ளார்.

பேரா. பத்மினி சுவாமிநாதன் மாநில அரசுத் திட்டங்கள் எந்த அளவுக்கு நடைமுறையில் செயலுருப் பெறுகின்றன என்பதை ஆராயும்முகமாகத் தமிழகத்தின்

### மால்கம் ஆதிசேஷையா விருது

2003ஆம் ஆண்டுக்கான மால்கம் ஆதிசேஷையா விருது பேராசிரியர் ஜந்தியாலா பால கங்காதர திலக் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. "கல்வித் துறையில் சமத்துவமின்மையின் பொருளியல் கூறுகளை" எடுத்துக்காட்டியமைக்காக இவ்விருது வழங்கப்படுவதாக நடுவர் குழு அறிவித்துள்ளது.

கல்வியில் முதலீடு செய்வது சமூக மேம்பாட்டுக்கு உதவும் என்பதை வற்புறுத்தும் திலக்கின் ஆய்வுகள் தொடக்கநிலை, நடுநிலை, உயர் கல்வி என்ற அனைத்திலும் கவனம் செலுத்துகின்றன. சமூகத்தின் நலிந்த பிரிவினரான அட்டவணைச் சாதிகள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பெண்கள் ஆகியோர் மீது திலக்கின் ஆய்வுகள் குவிமையம் கொண்டுள்ளன. நலிந்த பிரிவினரின் கல்வியில் முதலிடுவது தார்மீக அடிப்படையில் மட்டுமல்லாமல் செயல்திறன் அடிப்படையிலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று திலக் நிறுவுகிறார்.

உயர்கல்வியைவிட மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் முதலிடுவதே அதிகப் பயன்தரும் என்றும், அரசு மானியங்களைப் பள்ளிக் கல்விக்கே மடைமாற்றிவிட வேண்டும் என்றும் திலக் பரிந்துரைக்கிறார். பேராசிரியர் திலக்கின் 'ஆசியாவின் வளர்ச்சியில் கல்வியின் பங்கு' என்ற நூல் மால்கம் ஆதிசேஷையாவின் பாராட்டைப் பெற்றது என்பதும் குறிப்பிடத்தகுந்தது.

மதிய உணவுத் திட்டத்திற்கான நிதி நிலை ஒதுக்கீடு பற்றி ஆராய்ந்து வருகிறார். தமிழகக் கல்வித் திட்டங்களில் பெண்ணியல் ஆய்வு கள் பற்றியும் ஆராய்ந்துவருகிறார்.

பேரா. நிர்மல் சென்குப்தாவின் 'வளர்ச்சியும் அடையாளமும்' என்ற நூல் வெளிவரவுள்ளது. உலக வர்த்தக அமைப்பு பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ளார். மும்பை, இந்திரா காந்தி வளர்ச்சி ஆய்வு நிறுவனத்திற்கு வருகைப் பேராசிரியராகப் பொறுப்பேற்றுள்ளார்.

அரசு நிதிப் பகிர்மானம் பற்றிய ஆய்வுத் திட்டத்தில் இணைந்துள்ளதோடு, தமிழக அரசில் நிதிநிலை — குறிப்பாக ஊரக அமைப்புகள் மற்றும் சென்னை மாநகராட்சி — பற்றியும் முனைவர் *வி. சந்திரசேகர நாயுடு* விரிவாக ஆராய்ந்து வருகிறார்.

பாலாற்றுப் படுகை பற்றிய ஓர் ஆய்வினைச் செய்துள்ள முனைவர் *கி. சிவசுப்பிரமணியன்*, இந்தியாவின் பெரிய ஆற்றுப் படுகைகளில் நீர் வளத்தின் அளவு பற்றிய ஒரு தகவல் தளத்தை உருவாக்கி வருகிறார்.

தமிழ் இலக்கியக் கருவூலத்தின் உருவாக்கம், தமிழில் சுயசரிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி எழுதியுள்ள முனைவர் *ஆ. இரா. வேங்கடாசலபதி*, விடுதலைக்கு முந்திய வெகுசன இலக்கியம் பற்றிய ஓர் ஆய்வு நூலையும் எழுதி முடித்துள்ளார். புதுமைப்பித்தன் ஆய்வுச் செம்பதிப்பின் மூன்றாம் தொகுதியையும் தயாரித்துவருகிறார்.

சாதி மற்றும் ஆண் பாலினக் கருத்தாக்கங்கள் பற்றி ஆய்வு செய்துவரும் *முனைவர் எஸ். ஆனந்தியின்* பெண்கள், வேலை மற்றும் கருக்கலைப்பு பற்றிய ஆய்வறிக்கை அண்மையில் வெளிவரவுள்ளது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியைப் பற்றித் தற்பொழுது ஆராய்ந்துவருகிறார்.

முனைவர் *கிருபா அனந்த பூர்*வானொலி ஒலிபரப்புக்கும் உள்ளாட்சிக்குமான தொடர்பு பற்றியும், அதிகாரபூர்வமான மற்றும் பாரம்பரிய உள்ளாட்சி அமைப்புகளுக்கான உறவைப் பற்றியுமாக இரண்டு ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டுள்ளார். அரசு நிதிப் பகிர்மானம் பற்றிய நிறுவன ஆய்வுத் திட்டத்தில் பங்காற்றுவதோடு, கர்நாடகத்தில் அதிகாரப் பகிர்மானம் பற்றிய ஓர் ஆய்வறிக்கையின் இணையாசிரியராகவும் விளங்கியுள்ளார்.

உலக வர்த்தக அமைப்புக்கு உட்பட்ட வணிக இலகுவாக்க நடவடிக்கைகள் பற்றிய ஆய்வு செய்துவரும் முனைவர் *மோஅனா பகபதி*, ஓர் இடைக்கால அறிக்கையை இணையாசிரியராக எழுதியுள்ளார். தமிழ் நாட்டின் 10ஆம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் பங்காற்றியுள்ளார்.

சசக்ஸ் பல்கலைக்கழக வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவன நல்கையுடன் நிகழும் அதிகாரப் பகிர்மானம் பற்றிய ஆய்வுத் திட்டத்தின் முதன்மை ஆய்வாளராகப் பேரா. *வி.கே. நட்ராஜ்* விளங்குகிறார். கர்நாடகத்தில் அதிகாரப் பகிர்மானத்தின் பல்வேறு பரிமாணங்கள் பற்றிய ஓர் ஆய்வறிக்கையை இணையாசிரியராக எழுதியதோடு, உலகமயமாக்கக் கால கட்டத்தில் அரசுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு பற்றியும் எழுதியுள்ளார்.

இட ஒதுக்கீடு, பிற்படுத்தப்பட்ட சாதி/வர்க்க அரசியல், மத மாற்றத்



## மால்கம் ஆதிசேஷையா வருகைப் பேராசிரியர்

முனைவர் **எ. சுப்பராயலு** (1940) தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஓய்வு பெற்ற பேராசிரியர். ஜப்பானின் டோக்கியோ பல்கலைக்கழகத்திலும், பாரீசிலுள்ள உயராய்வுப் பள்ளியிலும் வருகைப் பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். பேராசிரியர் நொபோரு கராஷிமாவுடன் இணைந்து பல ஆய்வுத் திட்டங்களை நிறைவேற்றியுள்ளார். தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதியைப் பதிப்பித்துள்ள இவர், தற்போது தமிழக வரலாற்று நிலப்பட ஏட்டைத் தயாரித்து வருகிறார். வல்லம், கொடுமணல், பெரிய பட்டினம் ஆகிய இடங்களில் அகழ்வாய்வுகளைச் செய்துள்ளார். இலங்கையிலும் தெற்காசியாவிலும் தொல்லியல் களஆய்வுக் குழுவில் பங்காற்றியிருக்கிறார்.

முனைவர் உமா சக்கரவர்த்தி, முனைவர் கௌசிக் பாசு ஆகியோர் மால்கம் ஆதிசேஷையா வருகைப் பேராசிரியர்களாக முன்னர் விளங்கியுள்ளனர்.

தின் அரசியல், உயர் கல்வி பற்றிய தம் ஆய்வை பேரா. *பி. இராதா கிருஷ்ணன்* தொடர்ந்து வருகிறார். இந்தியாவின் ஆளுமுறை பிரச்சனைகள் பற்றிய நூலை எழுதி முடிக்கும் தருவாயில் இவர் இருக்கிறார்.

ஆய்வு சார்ந்த ஈடுபாடுகளோடு நீர்ப் பயனுரிமையாளர்களின் கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்து நீர்ப்பங்கீடு பற்றிய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான முன்முயற்சிகளுக்கும் வகைசெய்து வருகிறார் பேராசிரியர் *எஸ். ஜனகராஜன்*. நீர் பங்கீடு பற்றிய ஒரு நூலுக்கும் இணையாசிரியராக எழுதியுள்ளார். ஆய்வு முடிவுகளைப் பரவலாக எடுத்துச் செல்லும் முகமாக 'அவலநிலையில் தமிழக ஆறுகள்' என்னும் தமிழ் நூலைத் தொகுத்து வெளியிடவுள்ளார்.

மார்ச் 2003இல் முனைவர் நிர்மல் சென்குப்தா, மால்கம் ஆதிசேஷையா இருக்கைப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். முனைவர் எஸ். ஜனகராஜன் பேராசிரியராகவும், முனைவர் ஆ. இரா. வேங்கடாசலபதி இணைப் பேராசிரியராகவும் அமர்த்தப்பட்டனர்.

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம் முதன்முதலாகத் தமிழில் 'அவலநிலையில் தமிழக ஆறுகள்' என்ற நூலை வெளியிடுகிறது. இதன் ஆசிரியர் பேராசிரியர் எஸ். ஜனகராஜன். நீர்வளங்கள் எல்லாம் பயனுரிமையாளர்களின் சுயநலத்தினால் மாசுபட்டு அழிந்து வரும் நிலையில். சமூக விஞ்ஞானிகளும் நீர்மேலாண்மை வல்லுநர்களும் நுகர்வோரும் பயனுரிமையாளர்களும் இணைந்து இப்பிரச்சினைக்கு இந்நூலில் விடை காண முயல்கின்றனர்.

## நூல்கள் 2002 – 2003

***முனைவர் அனந்தகுமார் கிரி***

*Building in the Margins of Shacks: The Vision and Projects of Habitat for Humanity*. New Delhi: Orient Longman, 2002.

*Conversations and Transformations: Towards a New Ethics of Self and Society*. Lanham, MD: Lexington Books and Rowman & Littlefield, 2002.

Co-edited with Philip Quarles van Ufford, *A Moral Critique of Development: In Search of Global Responsibilities*. London: Routledge, 2003.

***பேரா. எஸ். ஜனகராஜன்***

*The Fluid Mosaic: Water Governance in the Context of Variability, Uncertainty and Change* (jointly with Marcus Moench, Ajaya Dixit, M.S.Rathore and Srinivas,M), NWCF, Nepal and ISET, Boulder, USA, March 2003.

***முனைவர் தங்கராஜ்***

*Land Reforms in India - Tamilnadu: An Unifished Agenda*, Sage Publications, New Delhi, 2003.